**NYC** Mayor's Office of Immigrant Affairs

# குடிவரவு நீதிமன்றம் 101

Tamil | தமிழ்

**குடிவரவு நீதிமன்றத்தில்**, நீங்கள் ஒரு குடிவரவு நீதிபதியின் முன்பாக உங்கள் தரப்பு வாதத்தை முன்வைக்கவும், அமெரிக்காவில் தங்கியிருக்க உங்களை ஏன் அனுமதிக்க வேண்டும் என்பதைத் தெரிவிக்கவும் உங்களுக்கு ஒரு வாய்ப்பு கிடைக்கும். குடிவரவு நீதிமன்றத்தில் உங்கள் வழக்கில் நீங்கள் தோல்வியடைந்தால், நீங்கள் மேல்முறையீடு செய்யலாம்.

**நீங்கள் நாடு கடத்தப்படலாம், ஒருவேளை:**

- நீங்கள் குடிவரவு நீதிமன்றத்தில் தோல்வியடைந்து, மேல்முறையீடு செய்யாவிட்டால்,
- அல்லது மேல்முறையீடு செய்து தோல்வியடைந்தால்.

## குடிவரவு நீதிமன்றத்தில் யார் இருப்பார்கள்?



- அங்கு ஒரு **குடிவரவு நீதிபதி** இருப்பார், அவர் நீங்கள் அமெரிக்காவில் தங்குவதற்கு அனுமதிக்கப்படலாமா என்பதைத் தீர்மானிப்பார்.
- அரசாங்கத்திற்காகப் பணிபுரியும் **ஒரு வழக்கறிஞர்** அங்கு இருப்பார். அமெரிக்க அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதே அவர்களின் பணியாகும். அவர்கள் உங்களுக்காகப் பணிபுரிபவர்கள் அல்ல.
- **உங்களுக்கென ஒரு வழக்கறிஞர் இருந்தால்**, அவர்கள் எப்போதும் உங்களுடன் நீதிமன்ற அறையில் இருக்க அனுமதிக்கப்படுவார்கள், மேலும் அவர்களால் உங்களை அழைக்கவும் சந்திக்கவும் முடியும்.

**நினைவில் கொள்ளுங்கள்: அரசாங்கம் உங்களுக்கு ஒரு வழக்கறிஞரை வழங்காது, ஆனால் நீதிமன்றத்தில் உங்களைப் பிரதிநிதித்துவப்படுத்த நீங்கள் ஒரு வழக்கறிஞரை நியமிக்கலாம்.**

## உங்கள் குடிவரவு நீதிமன்றத் தேதியைச் சரிபார்த்தல்

- உங்கள் நீதிமன்றத் தேதியைச் சரிபார்க்க, உங்களுக்கு உங்கள் A-எண் (A-number) தேவைப்படும். (உதாரணம்: A 000-000-000). இந்த எண் அரசாங்கத்தால் ஒதுக்கப்படுகிறது மற்றும் குடிவரவு ஆவணங்களில் காணப்படுகிறது.
- தானியங்கி வழக்குத் தகவல் அமைப்பு (Automated Case Information system) -ஐப் பயன்படுத்தி உங்கள் விசாரணைக்கான தகவலைச் சரிபார்க்கவும். கீழே இரண்டு வழிகள் உள்ளன:
  - 1-800-898-7180 என்ற எண்ணில் ஹாட்லைனை (Hotline) அழைக்கவும். உங்கள் A-எண்ணை உள்ளிட்டு, ஆபரேட்டரின் வழிமுறைகளைப் பின்பற்றவும்.
  - இணையப்பக்கத்தைப் பார்வையிடவும்: https://acis.eoir.justice.gov/en/. தேடல் பெட்டியில் உங்கள் A-எண்ணைத் தட்டச்சு செய்து "Enter" (உள்ளிடுக) என்பதைக் கிளிக் செய்யவும்.

**இந்தத் துண்டுப்பிரசுரம் பொதுவான தகவல்களை மட்டுமே வழங்குகிறது. இது சட்ட ஆலோசனை அல்ல. சட்ட ஆலோசனைக்கு ஒரு வழக்கறிஞரை அணுகவும்.**

NYC Mayor's Office of Immigrant Affairs

# குடிவரவு நீதிமன்றம் 101

Tamil | தமிழ்

## நேரில் நடைபெறும் உங்களின் விசாரணையை மெய்நிகர்/ தொலைபேசி வழி விசாரணையாக மாற்றுதல்

நேரில் நடைபெறும் உங்களின் குடிவரவு நீதிமன்ற விசாரணையை இணையம் அல்லது தொலைபேசி வடிவத்திற்கு மாற்ற விரும்பினால், நீங்கள் நீதிமன்றத்தில் முறையான கோரிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும். அடுத்த திட்டமிடப்பட்ட விசாரணைத் தேதிக்கு முன்னதாக, முடிந்தவரை சீக்கிரம் இந்தக் கோரிக்கையைச் சமர்ப்பிப்பது முக்கியம். அவ்வாறு செய்யும்போது, **ஒரு வழக்கறிஞரை அணுக வேண்டும் என்பதை** நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும்.



- சட்ட ஆலோசனையானது ஒரு வழக்கறிஞரிடமிருந்து பெறப்பட வேண்டும், அவரால் தேவையான ஆவணங்களைச் சரியாகத் தயார் செய்து தாக்கல் செய்வதில் உதவ முடியும்.
- நீங்கள் நீதிமன்றத்தில் விசாரணை முறையை மாற்றுவதற்கான மனு (Motion to Change Hearing Format) ஒன்றைத் தாக்கல் செய்ய வேண்டும். குடிவரவு நீதிபதி கோரிக்கையை ஆய்வு செய்து, முடிவை உங்களுக்கோ அல்லது உங்கள் வழக்கறிஞருக்கோ தெரிவிப்பார்.
- மனு அங்கீகரிக்கப்பட்டால், விசாரணை ஆன்லைனில் நடைபெறும்; மறுக்கப்பட்டால், விசாரணை நேரில் நடைபெறும்.

## சட்டப் பிரதிநிதித்துவத்தைக் கண்டறிதல்

சமீபத்திய மாதங்களில், குடிவரவு நீதிமன்றங்களுக்குள் குடிவரவு அமலாக்க நடவடிக்கைகள் குறித்த தகவல்கள் வந்துள்ளன. நீங்கள் காவலில் வைக்கப்படும் சூழல் ஏற்பட்டால், அதற்கென ஒரு திட்டத்தை நீங்கள் வைத்திருக்க விரும்பலாம். உங்களுக்குக் கேள்விகள் இருந்தால், ஒரு வழக்கறிஞரிடம் பேசுங்கள்.

**இலவச மற்றும் ரகசியமான குடிவரவுசட்ட உதவிக்கு, மேயரின் குடியேற்ற விவகார அலுவலகத்தின் (Mayor's Office of Immigrant Affairs, MOIA) குடிவரவு சட்ட உதவி ஹாட்லைனை அழைக்கவும்:**

**1-800-354-0365**

திங்கள் முதல் வெள்ளி வரை, காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை

மொழிபெயர்ப்பு வசதி உள்ளது

ஒவ்வொரு குடிவரவு நீதிமன்றத்திலும் அருகில் உள்ள இலவச அல்லது குறைந்த கட்டண குடிவரவு சட்ட சேவை வழங்குநர்களின் பட்டியல் உள்ளது.

உங்கள் நீதிமன்றத்திற்கு அருகிலுள்ள இலவச குடிவரவு சட்ட அமைப்புகளின் பட்டியலை முன்கூட்டியே பார்க்க QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது பின்வரும் இணையதளத்தைப் பார்வையிடவும்: www.justice.gov/eoir/list-pro-bono-legal-service-providers

**இந்தத் துண்டுப்பிரசுரம் பொதுவான தகவல்களை மட்டுமே வழங்குகிறது. இது சட்ட ஆலோசனை அல்ல. சட்ட ஆலோசனைக்கு ஒரு வழக்கறிஞரை அணுகவும்.**